# 12. இனிமைத் தமிழ் மொழி

உலகின் மக்கள் பல மொழிகளைப் பேசுகின்றார்கள். பழங்காலத்தில் மக்களால் பேசப்பட்ட சில மொழிகள் இன்று பேச்சு வழக்கில் இல்லை. சில மொழிகள் பழங்காலம் முதல் இன்று வரை பேசப்பட்டு வருகின்றன. அவற்றைத் தொன்மையான மொழிகள் எனக் கூறுவார்கள். மிகத் தொன்மையான மொழிகளுள் ஒன்று தமிழ்மொழி.




தமிழ்மொழி மீது தமிழ் மக்களுக்கு அளவற்ற பற்று உண்டு. தமிழர் தம் தாய் மொழியைக் குறிக்கும் பொழுதெல்லாம் ஓர் அடைமொழி கொடுத்தே கூறுவர். தேன்தமிழ் என்றும், தீந்தமிழ் என்றும் கூறி அதன் இனிமையைப் புலப்படுத்துவார்கள். பைந்தமிழ் எனப் பெயரிட்டு அதன் இளமைத் தன்மையைக் கூறுவார்கள். செந்தமிழ் என அழைத்து அதன் செம்மையைக் குறிப்பர்.


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

நமது முன்னோர் தாம் பேசிய மொழிக்குத் தமிழ் எனப் பெயரிட்டனர். 'த' வல்லினத்தைச் சார்ந்தது. 'மி' மெல்லினத்தைச் சார்ந்தது. ழ் இடையினத்தைச் சார்ந்தது. ழகர ஒலி பிற மொழிகளில் இல்லாத சிறப்பான ஒலி. இவ்வாறு, மொழியின் பெயரே இனிமை என்னும் பொருள் தருவதாய்ச் சிறப்பாய் அமைந்துள்ளது.

தமிழை முத்தமிழ் எனவும் சிறப்பித்துக் கூறுவர்; இது இயல், இசை, நாடகம் என மூவகைப்படும். இயற்றமிழ் செய்யுள், உரைநடை நூல்களைக் குறிக்கும். இவை எண்ணத்தை வெளியிட உதவும். இசைத்தமிழ் இசைப்பாடல்களைக் குறிக்கும். இவை உள்ளத்தை உருக்குவன. மனத்தை நெகிழச் செய்வன. நாடகத் தமிழ் பேச்சாலும் நடிப்பாலும் கருத்துக்களைக் கூறுவதாகும். இது மக்களின் கண்ணெதிரே காட்சிகளைக் காட்டி அவர்களை நல்வழிப்படுத்தும். முத்தமிழ்ப் பாகுபாடு தமிழ் மொழிக்குரியதொரு தனிச்சிறப்பாகும்.

தமிழ் மக்களுள் பலர் சிறந்த புலமை பெற்றுத் திகழ்ந்தனர். அவர்கள் சிறந்த பல நூல்களைப் படைத்தனர். அவற்றின் மூலம் உயர்ந்த கருத்துக்களைக் கூறினர். **'யாதும் ஊரே யாவரும் கேளிர்'** என்று புலவர் ஒருவர் பாடியுள்ளார். ஆம், உலகமக்கள் அனைவரையும் தமிழர் உறவினராகக் கொண்டனர். தமிழ் இலக்கியம் சிறப்புமிக்கது. உயர்ந்த கருத்துகளை அழகுபடக் கூறுவது.

தமிழ் என்னும் பெயரே இனிமை என்னும் பொருளில் அமைந்துள்ளது. அத்துடன் சொல் இனிமை, பொருள் இனிமை, ஓசை இனிமை, இலக்கண இனிமை, இலக்கிய இனிமை எனப் பல இனிமைகள் நிறைந்த இனிமைத் தமிழ் மொழி நமதாக இருப்பது பெருமையன்றோ!

**''வாழ்க தமிழ் மொழி''**



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

## சொல் அறிமுகம்

## වචන හඳුනාගනිමු

| | | | |
|---|---|---|---|
| 1. | பழங்காலம் | - | පැරණි කාලය |
| 2. | தொன்மை | - | පුරාණ කාලය |
| 3. | அளவற்றபற்று | - | අභිමානය |
| 4. | இளமைத்தன்மை | - | යෞවනත්වය |
| 5. | செம்மை | - | නිවැරදිබව |
| 6. | முன்னோர் | - | මුතුන්මිත්තන් |
| 7. | கண்ணெதிரே | - | ඇස් ඉදිරිපිට |
| 8 | பாகுபாடு | - | වෙනස්කම් |
| 9. | படைத்தனர் | - | මැව්වෝය |
| 10. | புலமை | - | පළල් බුද්ධිය/පණ්ඩිතකම |
| 11. | கேளிர் | - | නෑදෑයන් |
| 12. | இனிமை | - | මිහිරි |
| 13. | நாடகம் | - | නාට්‍ය |

## கிரகித்தற் பயிற்சி

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுவோம்.**
**පහත දී ඇති ප්‍රශ්නවලට උත්තර ලියමු.**

1. ‘முத்தமிழ்’என்பதில் அடங்குவன யாவை?
2. இப்பகுதியில் தமிழ் மொழியின் சிறப்பைக் குறிப்பிடும் சொற்களை எழுதுக.
3. தமிழ்மொழியைத் தொன்மையான மொழியென கூறுவதற்கான காரணம் என்ன?
4. ‘யாதும்ஊரே யாவரும் கேளிர்’ என்பதன் விளக்கம் என்ன?



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

## செயற்பாடு - I

**பிரித்து எழுதுக.**
**වෙන් කර ලියමු.**

1. பழங்காலம் :- ........................................
2. அளவற்ற :- ........................................
3. பெயரிட்டு :- ........................................
4. மொழிக்குரிய :- ........................................
5. கண்ணெதிரே :- ........................................

## செயற்பாடு - II

**பின்வரும் சொற்களை வைத்து வாக்கியம் அமைப்போம்.**
**පහත සඳහන් වචන යොදා වාක්‍ය හදමු.**

1. அளவற்ற
   ........................................................................................
2. பழங்காலம்
   ........................................................................................
3. புலப்படுத்து
   ........................................................................................
4. இனிமை
   ........................................................................................
5. பாகுபாடு
   ........................................................................................

## செயற்பாடு - III

**'தமிழ் மொழியின் சிறப்பு'** எனும் தலைப்பில் மேடைப்பேச்சு ஒன்றை எழுதுங்கள். அதை வகுப்பறையில் பேசிக்காட்டுங்கள்.

## கட்டுரை

ஒரு விடயம் பற்றியக் கருத்துக்களை ஒழுங்குபடுத்தி விரிவாக எழுதுவதே கட்டுரை எனப்படும். இது பல வகைப்படும்.

உதாரணம் :-

- ⊙ கற்பனைக் கட்டுரை
- ⊙ வருணனைக் கட்டுரை
- ⊙ வரலாற்றுக் கட்டுரை
- ⊙ விளக்கக் கட்டுரை

**கட்டுரை எழுதும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய சில விடயங்கள்,**

- ⊙ கட்டுரைச் சட்டகம் தயாரித்தல்.
- ⊙ தலைப்புக்கான தகவல்களைச் சேகரித்தல்.
- ⊙ பொருத்தமான உதாரணங்கள், மேற்கோள்கள், கதைகளை இனங்காணுதல்.
- ⊙ அத்தகவல்களைச் சீராக ஒழுங்குபடுத்தல்.
- ⊙ ஒழுங்குபடுத்தியவைகளைக் கட்டுரை உறுப்புக்களான முகவுரை, தொடருரை, முடிவுரை என்பவற்றிற்கு ஏற்ப எழுதுதல்.


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

## செயற்பாடு - IV

**கீழே தரப்பட்டுள்ள கட்டுரைச் சட்டகத்தை ஆதாரமாகக் கொண்டு கட்டுரை எழுதுவோம்.**

**(அ) தலைப்பு** : வைத்தியசாலையில் கண்ட காட்சி

**முகவுரை** : வைத்தியசாலை பற்றிய ஒரு அறிமுகம். **(சுருக்கமாக)**

**தொடருரைகள்**

- ✷ வைத்தியசாலையின் தோற்றம்
- ✷ கண்ட காட்சிகள்
- ✷ வைத்தியர்களின் நடமாட்டம்
- ✷ தாதிமாரின் செயல்கள்
- ✷ சிற்றூழியரின் செயல்கள்
- ✷ நோயாளிகளின் நடவடிக்கைகள்
- ✷ மருந்து வாங்குவோர்

**முடிவுரை** : வைத்தியசாலை பற்றிய உங்கள் கருத்து

**(ஆ தலைப்பு : எனது பாடசாலை நூல் நிலையம்**

**முகவுரை :** பாடசாலை நூல் நிலையம் பற்றிய ஓர் அறிமுகம் **(சுருக்கமாக)**



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

**தொடர்புரைகள்**

- ✸ நூல் நிலையத்தினால் பெறும் நன்மைகள்.
- ✸ புத்தகங்கள் வாசிக்க, எடுத்துச்செல்ல மேற்கொள்ளப்பட்ட வசதிகள்.
- ✸ அங்குள்ள நூல்கள், சஞ்சிகைகள், அவை ஒழுங்கு படுத்தப்பட்டுள்ள விதம்.
- ✸ நூல் நிலையத்தைப் பராமரிக்க வழங்கப்பட வேண்டிய ஒத்துழைப்பு.
- ✸ நூல் நிலையத்திலிருந்து மேலதிக நன்மைகளைப் பெறுவதற்கான ஆலோசனைகள்.

**முடிவுரை** :- நூல் நிலையத்தின் ஒழுங்கு விதிகளைப் பின்பற்றி நாம் பயன்பெற வேண்டும் என்ற கருத்து.

## மொழி வளம்

**பொதுப்பாற் சொற்கள்** ( ஆண், பெண் இருபாலாரையும் குறிக்கும்.)

| | |
|---|---|
| ♦ அகதி | ♦ அமைச்சர் |
| ♦ அறிவாளி | ♦ அநாதை |
| ♦ உலோபி | ♦ ஏழை |
| ♦ செயலாளர் | ♦ காரியதரிசி |
| ♦ குழந்தை | ♦ ஞானி |
| ♦ நோயாளி | ♦ நீதிபதி |
| ♦ மந்திரி | ♦ மேதை |
| ♦ விவேகி | ♦ விஞ்ஞானி |
| ♦ வழக்காளி | ♦ வைத்தியர் |
| ♦ கவிஞர் | ♦ குற்றவாளி |



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக